**தலைப்பு 288 – நில அளவையாளர் திணைக்களம்**

---

**1. நிதிக்கூற்றுக்கள்**

**1.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்**

நில அளவையாளர் திணைக்களத்தின் 2020 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதிநிலைமைக் கூற்று மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிச் செயலாற்றல் கூற்று, காசுப்பாய்ச்சல் கூற்று என்பவற்றை உள்ளடக்கிய 2020 திசெம்பர் 31 ஆந் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்துடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலைமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுக்கு இணங்க எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 11(1) ஆம் பிரிவின் பிரகாரம் நில அளவையாளர் திணைக்களத்தின் நிதிக்கூற்றுக்கள் தொடர்பான எனது கருத்துரைகளும் அவதானிப்புகளும் உள்ளடங்கிய பொழிப்பறிக்கை 2021 யூலை 14 திகதி பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தருக்கு வழங்கப்பட்டது. தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 11(2) ஆம் பிரிவின் பிரகாரம் திணைக்களத்தின் வருடாந்த விரிவான முகாமைத்துவ கணக்காய்வு அறிக்கை 2021 செப்தெம்பர் 08 ஆந் திகதி பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தருக்கு வழங்கப்பட்டது. இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலைமைப்பின் 154(6) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுடன் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 10 ஆம் பிரிவின் பிரகாரம் இந்த அறிக்கை பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிக்கப்படுகின்றது.

இந்த அறிக்கையின் 1.6 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்டிருந்த விடயங்களிலிருந்தான தாக்கத்தை தவிர்த்து, நிதிக்கூற்றுக்கள் 2020 திசெம்பர் 31 இல் உள்ளவாறு நில அளவையாளர் திணைக்களத்தின் நிதி நிலைமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிச் செயலாற்றலினையும் காசுப்பாய்ச்சலினையும் பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டுத் தத்துவங்களுக்கு இணங்க உண்மையானதும் நியாயமானதுமான நிலைமையை பிரதிபலிக்கின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

**1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை**

இந்த அறிக்கையின் 1.6 ஆம் பந்தியில் காட்டப்பட்டுள்ள விடயங்களை அடிப்படையாகக் கொண்டு எனது அபிப்பிராயம் முனைப்பழியள்ளதாக்கப்படுகின்றது.

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (இ.க.நி) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக எனது பொறுப்பு, கணக்காய்வாளரின் பொறுப்பு என்ற பிரிவில் மேலும் விபரிக்கப்பட்டுள்ளது. எனது அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

**1.3 நிதிக்கூற்றுக்கள் தொடர்பான கணக்கீட்டு உத்தியோகத்தரின் பொறுப்பு**

பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டு தத்துவங்களுக்கு அமைவாகவும் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 38 ஆம் பிரிவில் குறிப்பிடப்பட்ட ஏற்பாடுகளுக்கு இணங்கவும் உண்மையான மற்றும் நியாயமான நிலைமையை பிரதிபலிக்கும் வகையில் நிதிக்கூற்றுக்களைத் தயாரித்தல், மோசடிகள் மற்றும் தவறுகள் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்கள் இன்றிய நிதிக்கூற்றுக்களை தயாரிக்க கூடிய

வகையில் உள்ளகக் கட்டுப்பாட்டினை தீர்மானித்தல் கணக்கீட்டு உத்தியோகத்தரின் பொறுப்பாகும்.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 16(1) ஆம் பிரிவின் பிரகாரம் திணைக்களத்தினால் வருடாந்த மற்றும் உரிய நேரத்தில் நிதிக்கூற்றுக்களைத் தயாரிக்க கூடிய வகையில் தனது வருமானங்கள், செலவினங்கள், சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் தொடர்பாக உரிய வகையில் புத்தகங்கள் மற்றும் அறிக்கைளை பேணுதல் வேண்டும்.

தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 38(1)(இ) உப பிரிவின் பிரகாரம் திணைக்களத்தின் நிதிக் கட்டுப்பாட்டிற்காக ஆக்கபூர்வமான உள்ளகக் கட்டுப்பாட்டு முறைமையொன்று தயாரித்து பேணப்படுகின்றது என்பதனை பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தர் உறுதிப்படுத்த வேண்டியிருந்ததுடன் அம்முறைமையின் செயற்திறன் தொடர்பாக காலத்திற்கு காலம் மீளாய்வொன்று செய்யப்பட்டு அதன் பிரகாரம் முறைமையை செயற்திறனாக மேற்கொள்வதற்கு தேவையான மாற்றங்கள் செய்யப்படல் வேண்டும்.

## 1.4 நிதிக்கூற்றுக்களின் கணக்காய்வு தொடர்பாக கணக்காய்வாளரின் பொறுப்பு

ஒட்டுமொத்தமாக நிதிக்கூற்றுக்கள், மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்டதாக நியாயமான உறுதிப்படுத்தலொன்றைப் பெற்றுக்கொள்வது மற்றும் எனது அபிப்பிராயம் உள்ளடக்கப்பட்ட கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கையை வழங்குவது எனது நோக்கமாகும். நியாயமான உறுதிப்படுத்தல் உயர் மட்டத்திலான உறுதிப்படுத்தலொன்றாக இருந்த போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வினை மேற்கொள்ளும் போது அது எப்போதும் பொருண்மையான தவறான கூற்றுக்கள் இல்லாமை என்பதன் உறுதிப்படுத்தலொன்றல்ல. மோசடிகள் மற்றும் தவறுகள் தனியாகவோ அல்லது கூட்டாகவோ தாக்கமளிப்பதால் பொருண்மையான தவறான கூற்றுக்கள் இருக்கக்கூடியதாக இருப்பதுடன் அதன் பொருண்மையான தன்மையானது இந்நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பயன்படுத்துவோரால் பொருளதார தீர்மானங்கள் தொடர்பாக ஏற்படும் தாக்கத்தின் அடிப்படையில் தங்கியுள்ளது.

இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வின் ஒரு பகுதியாக என்னால் தொழில்சார் தீர்ப்புக்கள் மற்றும் தொழில்சார் ஐயப்பாடுகளுடன் கணக்காய்வு செய்யப்பட்டன. என்னால் மேலும்

- மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களின் ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்று ஆபத்தினை இனங்காணுதல் மற்றும் மதிப்பீடு செய்வதற்காக சந்தர்ப்பத்திற்கு பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகள் திட்டமிட்டு அமுலாக்கப்பட்டன. பிழையாகக் காட்டுவதன் காரணமாக இடம் பெறுகின்ற பொருண்மையான பிறழ் கூற்றினால் எழும் தாக்கங்களினை விட மோசடிகளால் இடம்பெறும் தாக்கம் பாரியதாக இருப்பதுடன் தவறான கூட்டிணைவு, தவறான ஆவணங்களைத் தயாரித்தல், வேண்டுமென்றே விட்டுவிடுதல் பிழையாகக் காட்டுதல் அல்லது உள்ளக கட்டுப்பாட்டை தவிர்ப்புச் செய்தல் மோசடியொன்று ஏற்படுவதற்கு காரணமாகின்றது.

- உள்ளக கட்டுப்பாட்டின் ஆக்கபூர்வமானதன்மை தொடர்பாக அபிப்பராயமொன்றை தெரிவித்தல் கருத்தில் கொள்ளப்படாதிருந்த போதிலும் உள்ளகக் கட்டுப்பாடு தொடர்பான விளக்கம் பெற்றுக்கொள்ளப்பட்டது.

- வெளிப்படுத்தல்கள் உள்ளடக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கத்திற்கு அடிப்படையான கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் சம்பவங்கள் பொருத்தமான மற்றும் நியாயமான வகையில் நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்டுள்ளதாக மதிப்பீடு செய்தல்.

- நிதிக்கூற்றுக்களின் கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கத்திற்கு அடிப்படையான கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் சம்பவங்கள் பொருத்தமாகவும் நியாயமாகவும் உள்ளடக்கப்பட்டுள்ளதாகவும் வெளிப்படுத்தல்கள் உள்ளடக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தல் மதிப்பீடு செய்யப்பட்டது.

எனது கணக்காய்வில் இனங்காணப்பட்ட முக்கியமான கணக்காய்வு கண்டுபிடிப்புக்கள் பிரதான உள்ளகக் கட்டுப்பாட்டு பலவீனங்கள் மற்றும் ஏனைய விடயங்கள் தொடர்பாக கணக்கீட்டு உத்தியோகத்தருக்கு அறிவிக்கப்பட்டுள்ளது.

## 1.5 ஏனைய சட்டத் தேவைப்பாடுகள் தொடர்பான அறிக்கை

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 6(1)(ஈ) பிரிவின் பிரகாரம் பின்வரும் விடயங்களை நான் தெரிவித்துக்கொள்கின்றேன்.

(அ) முன்னைய ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்களுடன் இணங்குகின்றது. எனவும்

(ஆ) இந்த அறிக்கையின் 1.6.1(அ),(ஆ),(இ),(ஈ),(உ) 1.6.5 மற்றும் 1.6.6 ஆம் பந்திகளில் குறிப்பிட்ட அவதானிப்புக்கள் சம்பந்தமாக முன்னைய ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் தொடர்பான எனது அறிக்கையில் என்னால் மேற்கொள்ளப்பட்ட சிபார்சுகள் அமுல்ப்படுத்தப்பட்டிருக்கவில்லை.

## 1.6 நிதிக்கூற்றுக்கள் மீதான கருதுரைகள்

### 1.6.1 நிதிக்கூற்றுக்கள் சுற்றறிக்கை ஏற்பாடுகளுடன் இணங்கியிருக்காமை.

2/2020 ஆம் இலக்க அரசாங்க நிதி சுற்றறிக்கையின் 10.1 ஆம் பந்தியின் கீழ் 2020 ஆம் ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பது தொடர்பாக அரசாங்க கணக்குகள் பணிப்பாளர் நாயகத்தினால் வழங்கப்பட்ட வழிகாட்டி இலக்கம் 06 இன் பிரகாரம் நிதிக்கூற்றுக்கள் தயாரிக்கப்பட வேண்டியிருந்தும் அத் தேவைப்பாட்டினை மீறிய சந்தர்ப்பங்கள் கீழே தரப்படுகின்றன.

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | சிபார்சுகள் |
|---|---|---|---|
| (அ) | மதவாச்சி, எம்பிலிபடி, கருஞ்சிக்காடு, மாதம்பை ஆகிய பிராந்திய நில அளவையாளர் அலுவலகங்கள் மற்றும் கிரிதலை உத்தியோகபூர்வ இல்லம் ஆகிய கட்டிடங்களின் நிர்மாண நடவடிக்கையானது 2018 திசெம்பர் 31 ஆந் திகதியளவில் பூர்த்தியடைந்து காணப்பட்டதுடன் அத்திகதியில் | திணைக்களத்திடமிருந்து உரிய அறிக்கையை பெற்றுக்கொள்ளும் தாமதத்தினால் கட்டிடங்களின் கிரயத்தை சரியாக நிதிக்கூற்றுக்களில் உள்ளடங்குதல் தாமதமடைந்துள்ளது. | நிர்மாண வேலைகள் பூர்த்தியடைந்துள்ள கட்டிடங்களின் கிரயமானது நிதிக் கூற்றுக்களில் வெளிப்படுத்தல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | உள்ளவாறான ரூபா 9,764,046 தொகையான பூர்த்தியடையாத வேலைகளின் மீதி 2018 ஆம் ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்களில் பூர்த்தியடையாத வேலைகளின் கீழ் காட்டப்பட்டிருந்தன. 2019 ஆம் ஆண்டின் போது உரிய நிர்மாணங்களின் கூட்டு மொத்த தொகை ரூபா 83,236,331 ஆக இருந்த போதிலும் அப் பெறுமதியானது 2019 மற்றும் 2020 ஆம் ஆண்டுகளுக்கான நிதிக்கூற்றுக்களில் நிதியற்ற சொத்துக்களாகக் காட்டப்பட்டிருந்ததுடன் 2018 ஆம் ஆண்டில் காட்டப்பட்டுள்ள மீதியான ரூபா 9,764,046 அவ்வாறே மீளாய்வாண்டின் இறுதியிலும் காட்டப்பட்டிருந்தது. | | |
| (ஆ) | பதுளை மற்றும் கிரிதலை பிராந்திய நில அளவையாளர் அலுவலகக் கட்டிடங்கள் 2019 ஆம் ஆண்டின் போது நிர்மாணிக்கப்பட்டுக் காணப்பட்டதுடன் 2019 திசெம்பர் 31 ஆந் திகதியளவில் அச் சொத்துக்களின் ரூபா 36,770,240 தொகையான பூர்த்தியடையாத வேலைக் கிரயமானது மீளாய்வாண்டிற்கான 2020 நிதிக்கூற்றுக்களில் நிதியற்ற சொத்துக்கள் தொடர்பான கூற்றின் மூலம் வெளிப்படுத்தப்பட்டிருக்கவில்லை. | திணைக்களத்திடமிருந்து உரிய அறிக்கையைப் பெற்றுக்கொள்ளும் தாமத்தினால் பூர்த்தியடையாத வேலைகளின் கிரயத்தை சரியாக நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்கப்படுதல் தாமதமடைந்துள்ளது. | ஆண்டின் இறுதியில் பூர்த்தியடையாத வேலை மீதிகள் நிதிக் கூற்றுக்களின் மூலம் வெளிப்படுத்தல் வேண்டும். |
| (இ) | ரூபா 13 மில்லியன் செலவில் பொலன்னறுவை மாவட்ட நில அளவையாளர் அலுவலகத்தின் நிர்மாண நடவடிக்கைகள் 2017 ஆம் ஆண்டில் பூர்த்தியடைந்திருந்த போதிலும் 2017, 2018, 2019 மற்றும் 2020 ஆம் ஆண்டுகளின் நிதிக்கூற்றுக்களில் வெளிப்படுத்தப்பட்டிருக்கவில்லை. | திணைக்களத்திடமிருந்து உரிய அறிக்கையைப் பெற்றுக்கொள்ளுவதிலுள்ள தாமதத்தினால் கட்டிடங்களின் கிரயத்தை நிதிக்கூற்றுக்களில் உள்ளடங்குதல் தாமதமடைந்துள்ளது. | நிர்மாண வேலைகள் பூர்த்தி செய்யப்பட்டுள்ள கட்டிடங்களின் கிரயம் நிதிக் கூற்றுக்களின் மூலம் வெளிப்படுதல் வேண்டும். |
| (ஈ) | 2017 ஆம் ஆண்டின் போது காணிகள் மற்றும் பாராளுமன்ற மறுசீரமைப்பு அமைச்சிடமிருந்து காணி வங்கி செயற்திட்டத்தின் | காணி வங்கி செயற்திட்டத்தின் கீழ் பெற்றுக்கொள்ளப்பட்ட லெப்டொப் கணனியைக் | ஏனைய நிறுவனங்களால் வழங்கப்பட்ட நிதி ஏற்பாட்டின் அடிப்படையில் கொள்வனவு |

| | | | |
|---|---|---|---|
| | கீழ் பெற்றுக்கொள்ளப்பட்டிருந்த ரூபா 37.83 மில்லியன் தொகையான லெப்டொப் கணனி, ஒப்டிகல் கேபல், திட்ட வரைபட ஸ்கேனர் ஆகிய சொத்துக்கள் 2017, 2018, 2019 மற்றும் 2020 ஆம் ஆண்டுகளுக்கான போல மீளாய்வாண்டிற்கான நிதிக் கூற்றுக்களில் வெளிப்படுத்தப்பட்டிருக்கவில்லை. | கணக்கீடு செய்யுமாறு மாகாண அலுவலகங்களுக்கு ஆலோசனை வழங்கப்பட்டுள்ளது. | செய்யப்பட்டுள்ள சொத்துக்களை முறையாக கணக்கீடு செய்து நிதிக் கூற்றுக்களில் வெளிப்படுத்தல் வேண்டும். |
| (உ) | மத்திய, வட மத்திய , கிழக்கு, வடமேல் ஆகிய மாகாணங்களில் திணைக்களத்திற்குச் சொந்தமான வெற்றுக் காணிகள் 1.3139 ஹெக்டெயர் களையும் அனுராதபுரம், கல்லோயா ஆகிய இடங்களில் கட்டிடம் நிர்மாணிக்கப்பட்ட 02 காணிகளும், பதுளை சிரேஸ்ட நில அளவை அத்தியட்சகரின் உத்தியோகபூர்வ இல்லமும் அனுராதபுரம் பெரசவி முகாம் உள்ளடங்கலாக தென் மாகாணத்தின் மேலும் 02 கட்டிடங்களும் மீளாய்வாண்டின் இறுதி வரை மதிப்பீடு செய்யப்பட்டு கணக்கீடு செய்யப்பட்டிருக்கவில்லை. | மதிப்பீட்டுத் திணைக்களத்தின் மூலம் அனைத்து காணிகளும் கட்டிடங்களும் மதிப்பீடு செய்யப்பட்டு கணக்கீடு செய்வதற்காக மாகாண நில அளவையாளர் நாயகங்களுக்கு தெரியப்படுத்தப்பட்டுள்ளதுடன் உரிய தகவல்கள் அனைத்ததையும் உள்ளடக்குவதற்காக கணனி தகவல் முறைமையும் தயாரிக்கப்பட்டுள்ளது. | நிறுவனத்திற்குச் சொந்தமான சொத்துக்கள் மதிப்பீடு செய்யப்பட்டு கணக்கீடு செய்யப்படுதல் வேண்டும். |

**1.6.2 நிதி நிலைமை கூற்று**

ஆதனங்கள், பொறிகள் உபகரணங்கள் என்பவற்றை கணக்கீடு செய்யும் போது பின்வரும் முறைப்பாடுகள் அவதானிக்கப்பட்டன.

| | கணக்காய்வு அவதானிப்பு | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | சிபார்சுகள் |
|---|---|---|---|
| (அ) | நிதியற்ற சொத்துக்களின் கடந்த ஆண்டு இறுதியில் காணப்பட்ட மீதியானது பிழையாக மீளாய்வாண்டின் ஆரம்ப மீதியாக முன்கொண்டு வந்ததன் காரணமாக ரூபா 84,446,460 தொகையான விளக்கமளிக்காத வித்தியாசம் அவதானிக்கப்பட்டது. | நிதியற்ற சொத்துக்களை கணக்கீடு செய்யும் போது தற்பொழுது காணப்படுகின்ற சொத்துக்களை மதிப்பீடு செய்து புதிய சிகாஸ் கணனி முறைமைக்கு உள்ளடக்கும் போது ஆரம்ப மீதியாக உள்ளடக்க வேண்டி ஏற்பட்டது. எனவே தற்பொழுது காணப்படுகின்ற அனைத்து சொத்துக்களும் கணக்கீடு | நிதிக்கூற்றுக்களில் தகவல்களை சரியாக வெளிப்படுத்தப்பட வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | | செய்யப்பட்டு முடியம் வரை முன்னைய ஆண்டின் இறுதி மீதிக்கும் ஆண்டின் ஆரம்ப மீதிக்குமிடையே வித்தியாசம் ஏற்படும். | |
| (ஆ) | 2012 ஆம் ஆண்டில் நிதி குத்தகை முறைமையின் கீழ் இத் திணைக்களத்திற்குப் பெற்றுக்கொள்ளப்பட்டு நிதியற்ற சொத்துக்களின் கீழ் கணக்கீடு செய்யப்பட்ட இரண்டு மோட்டார் வாகனங்களின் குத்தகை கால எல்லை மிகைப்பதற்கு முன்னர் அதாவது 2014 ஆம் ஆண்டிலிருந்து மீளாய்வாண்டின் இறுதி வரை காணி ஆணையாளர் நாயகத் திணைக்களத்திற்கு பயன்பாட்டிற்காக வழங்கப்பட்டிருந்தது. | கொவிட் நிலைமையின் கீழ் தகவல்களைத் தயாரிப்பதற்கு தாமதமடைந்ததனால் மிக விரைவாக பதிலை வழங்குவதற்கு நடவடிக்கை எடுப்பேன். | மோட்டார் வாகனனங்களை மீளப் பொற்றுக்கொள்வதற்கு அல்லது சட்டரீதியாக ஒப்படைப்பதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

**1.6.3 வைப்புக்கள்**

நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக வைப்புக்களை கொடுப்பனவு செய்தல் மற்றும் மீதிகளைக் கணக்கீடு செய்யும் போது பின்வரும் குறைபாடுகள் அவதானிக்கப்பட்டன.

| கணக்காய்வு அவதானிப்பு | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | சிபார்சுகள் |
|---|---|---|
| 2020 திசெம்பர் 31 இல் உள்ளவாறு வைப்புக் கணக்குகள் தொடர்பான கூற்றின் மீதிக்கும் திறைசேரி கணனி அச்சுப் பிரதிகளின் மீதிக்கும் இடையே ரூபா 47,069 தொகையான விளக்கமளிக்கப்படாத வித்தியாசம் அவதானிக்கப்பட்டது. | 2015 ஆம் ஆண்டின் 6000-0000-00-0015-0143 ஆம் இலக்க பொது வைப்புக் கணக்கு பூச்சியமாக்கப்பட்டு மூடப்பட்டிருந்த போதிலும் சில மாகாண அலுவலகங்களினால் அக் கணக்கு பூச்சியமாகக்கப்படாதிருந்ததுடன் இதன் காரணமாக திறைசேரி புத்தகங்களுக்கும் திணைக்கள புத்தகங்களுக்குமிடையே இந்த வித்தியாசம் காணப்பட்டது. | வித்தியாசத்தை இணங்கண்டு தேவையான சரி செய்தல் செய்யப்படுதல் வேண்டும். |

**1.6.4 அரசாங்க உத்தியோகத்தர்களுக்கான முற்பணக் கணக்குகள் தொடர்பான இணக்கக் கூற்றுக்கள்.**

இது சம்பந்தமாக பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | சிபார்சுகள் |
|---|---|---|---|
| (அ) | அரசாங்க உத்தியோகத்தர்களுக்கான முற்பணங்கள் பீ கணக்கின் காலப் பாய்வின் மொத்தத்திற்கும் தனித்தனி மீதிகளின் மொத்தத்திற்கும் இடையே ரூபா 766,064 தொகையான இனங்காணப்படாத வித்தியாசம் அவதானிக்கப்பட்டது. | சரி செய்து செய்வதற்கு நடவடிக்கை எடுப்பேன். | வித்தியாசத்தை இனங் கண்டு தேவையான சரி செய்தல் செய்யப்படுதல் வேண்டும். |
| (ஆ) | தனித்தனி மீதிகளின் மொத்தத்திற்கும் திணைக்கள கட்டுப்பாட்டுக் கணக்கின் மீதிக்குமிடையே ரூபா 200,450 தொகையான வித்தியாசம் அவதானிக்கப்பட்டது. | இந்த வித்தியாசத்திந்கான காரணத்தை தேடிப் பார்த்து எதிர்காலத்தில் தேவையான முயற்சிகள் எடுப்பதற்கு நடவடிக்கை எடுப்பேன். | வித்தியாசத்தை இனங் கண்டு தேவையான சரி செய்தல் செய்யப்படுதல் வேண்டும். |

**1.6.5 பதிவேடுகள் மற்றும் புத்தகங்கள் பேணப்படாமை**

திணைக்களத்தினால் பின்வரும் பதிவேடுகள் பேணப்படாதிருந்தமை கணக்காய்வின் போது அவதானிக்கப்பட்டது.

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | சிபார்சுகள் |
|---|---|---|
| திணைக்களத்தினால் நி.பி 891(i) இன் பிரகாரம் நிதி நடவடிக்கைகளுக்குப் பொறுப்பான உத்தியோகத்தர்களுக்கான பிணைப் பதிவேடு பேணப்பட்டிருக்கவில்லை. | நி.பி 891(i) இன் பிரகாரம் பிணை வைக்க வேண்டிய உத்தியோகத்தர்களை இணங்கண்டு பிணைப் பதிவேட்டினைப் பேணுவதற்கு நடவடிக்கை எடுப்பேன். | நிதிப் பிரமாணத்தின் பிரகாரம் பிணைப் பதிவேட்டினைப் பேணுதல் வேண்டும். |

### 1.6.6 கணக்காய்விற்கான சான்றுகள் இல்லாமை

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | சிபார்சுகள் |
| --- | --- | --- |
| நாட்டின் பல்வேறு பிரதேசங்களின் நூறு இடங்களில் அமைந்துள்ள ரூபா 5,689 மில்லியனாக மதிப்பீடு செய்து கணக்கீடு செய்துள்ள 49.477 ஹெக்டெயர் காணிகளின் உரிமையை உறுதிப்படுத்துவதற்காக உறுதிப் பத்திரம் திட்ட வரைபடம் காணிகளை வழங்கும் சான்றிதழ் மற்றும் நாட்டின் பல்வேறு பிரதேசங்களின் 76 இடங்களில் அமைந்துள்ள ரூபா 1,009 மில்லியனாக மதிப்பிட செய்துள்ள 666,737 சதுர அடி அளவுள்ள திணைக்களத்தின் கட்டிடத்தின் சட்டரீதியான உரிமையை உறுதிப்படுத்துவதற்கு அக் கட்டிடம் நிர்மாணிக்கப்பட்ட காணியின் உறுதிப்பத்திரம் கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை. | முறையாக ஆவணப்படுத்துதல் தற்பொழுது ஆரம்பிக்கப்பட்டுள்ளது. அணைத்து காணிகள் மற்றும் கட்டிடங்களுக்குரிய தகவல்களை உள்ளடக்குவதற்காக கணனி தகவல் முறைமையும் தயாரிக்கப்பட்டுள்ளது. | சொத்துக்களின் சட்டரீதியான உரிமையை உறுதிப்படுத்துவதற்கு தொடர்புபட்ட ஆவணங்கள் கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்படுதல் வேண்டும். |

## 2. நிதி மீளாய்வு

### 2.1 செலவு முகாமைத்துவம்

பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்படுகின்றன.

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | சிபார்சுகள் |
| --- | --- | --- |
| ஐந்து மூலதன செலவு விடயங்கள் தொடர்பாக நிதி ஏற்பாடு செய்யப்பட்டிருந்த ரூபா 19,969,466 மொத்த தொகை சேமிக்கப்பட்டிருந்ததுடன் அவற்றில் 54 சதவீத்திலிருந்து 99 சதவீதம் வரையான வீச்சுடைய சேமிப்புக்கள் காணப்பட்டன. | 2020 ஆம் ஆண்டில் காணப்பட்ட கொரோனா தொற்று நோய் பரவலின் காரணமாக எதிர் பார்த்த நிர்மாண வேலைகள் மற்றும் திருத்த வேலைகளை முழுமையாகச் செய்ய முடியாதிருந்தமை, மூலதனச் சொத்துக்களை நிர்ணயிக்கப்பட்ட திகதிக்கு வழங்குவதற்கு உரிய வழங்குனர்களுக்கு | நிதி எற்பாட்டினை செயற்திறனாக பயன்படுத்துதல் வேண்டும். |

|  | முடியாதிருந்தமை, பயிற்சி கற்கை நெறிகளை நடாத்துவதற்கு முடியாதிருந்தமை முதலிய காரணங்களால் மூலதன செலவு விடயங்களில் சேமிப்பு ஏற்பட்டது. |  |
| --- | --- | --- |

## 2.2 பொறுப்புக்கள் மற்றும் கடப்பாடுகளை மேற்கொள்ளல்

பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள் | சிபார்சுகள் |
| --- | --- | --- |
| திணைக்களத்தின் எட்டு செலவு விடயங்களில் ரூபா 4,944,336 மொத்த தொகை சேமிக்கப்பட்டிருந்த போதிலும் அச் செலவு விடயங்களின் கீழ் உருவாகியிருந்த பொறுப்புக்களின் அளவு ரூபா 20,791,007 ஆக இருந்தனால் சேமிப்புக்களை மிகைத்த பொறுப்புக்களின் மொத்த தொகை ரூபா 15,846,671 ஆகும். | கணக்காய்வு அவதானிப்புக்களுடன் இணங்குகிறேன். எதிர்காலத்தில் காணப்படும் நிதி ஏற்பாட்டின் அளவினை அடிப்படையாகப் கொண்டு பொறுப்புக்களை மேற்கொள்வதற்கு நடவடிக்கை எடுப்பேன். | நிதி ஏற்பாட்டின் சேமிப்புக்களை மிகைத்து பொறுப்புக்களை மேற்கொள்வதற்கு நடவடிக்கை எடுக்காதிருநத்தல் வேண்டும். |

## 2.3 வைப்பு மீதிகள்

பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள் | சிபார்சுகள் |
| --- | --- | --- |
| பொது வைப்புக் கணக்கில் காணப்பட்ட 02 ஆண்டுகளுக்கும் 05 ஆண்டுகளுக்கும் இடைப்பட்ட ரூபா 1,969,062 தொகையான 1 முதல் 2 வருடங்களுக்கு இடைப்பட்ட 1,906,956 மீதிகள் நி.பி 571(3) இன் பிரகாரம் நடவடிக்கை எடுத்து மீளச் செலுத்துவதற்கு அல்லது அரசாங்க வருமானத்திற்குச் செலவு வைப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | உரிய வைப்புக்களைச் செலுத்த வேண்டிய நபர்களையும் நிறுவனங்களையும் தொடர்பு கொள்ள முடியாதிருந்தமை, பணம் வைப்புச் செய்யப்பட்டமையினைச் சான்றுபடுத்துவதற்கு உரிய பற்றுச் சீட்டுக்கள் சமர்ப்பிக்கப்படாமை, அதிகாரம் பெற்ற நில அளவையாளர்களுக்கு வழங்கப்பட்டுள்ள நில அளவை வேண்டுதல்களின் வேலைகள் இன்று வரை | நி.பி 571(3) இன் பிரகாரம் நடவடிக்கை எடுத்து மீளச் செலுத்துவதற்கு அல்லது அரசாங்க வருமானத்திற்கு செலவு வைப்பதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

| | | |
|---|---|---|
| | பூர்த்தி செய்து ஒப்படைக்கப்படாததனால் உரிய பிணை வைப்பு பணத்தை மீளச் செலுத்ததுவதற்கு முடியாமை ஆகிய காரணங்களின் அடிப்படையில் பொது வைப்புக் கணக்கில் 01 ஆண்டிற்கும் 05 ஆண்டுகளிற்கும் இடைப்பட்ட மீதிகள் காணப்பட்டன. நி.பி 571(3) இன் பிரகாரம் நடவடிக்கை எடுத்து மீளச் செலுத்துவதற்கு அல்லது அரசாங்கத்தின் வருமானத்திற்கு செலவு வைப்பதற்கு நடவடிக்கை எடுப்பேன். | |

**3. செயற்பாட்டு மீளாய்வு**

**3.1 சொத்துக்கள் முகாமைத்துவம்**

**பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.**

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள் | சிபார்சுகள் |
|---|---|---|
| (அ) மொனறாகலை பிராந்திய நில அளவையாளர் அலுவலகத்தில் ஒரு ஜீப் வண்டியை 2016 ஆகஸ்ட் மாதத்திலிருந்தும் இழுவைப் பெட்டியுடனான ஒரு உழவு இயந்திரத்தை 2008 ஆம் ஆண்டிலிருந்தும் பாவனையிலிருந்து ஒதுக்கி வைப்பதற்கு மற்றும் கைதவிர்ப்புச் செய்வதற்கு ஊவா மாகாண சபையின் இயந்திர பொறியியலாளரினால் சிபார்சு செய்யப்பட்டிருந்த போதிலும் மீளாய்வாண்டின் இறுதி வரையும் அதற்கிணங்க நடவடிக்கை எடுக்க முடியாதிருந்தது. | காணப்பட்ட கொவிட் தொற்று நோய் நிலைமையானது இச் செயற்பாடுகளை பூர்த்தி செய்வதில் தாமதம் ஏற்படுவதற்கு நேரடியாகத் தாக்கமளித்திருந்ததுடன் 2021 ஆம் ஆண்டின் போது முடிவுறுத்துவதற்கு முடியும் என எதிர்பார்க்கப்படுகின்றது. | பாவனையிலிருந்து ஒதுக்கி வைப்பதற்கு மற்றும் கைதவிர்ப்புச் செய்வதற்கு ஊவா மாகாண சபையின் இயந்திர பொறியியலாளரினால் மேற்கொள்ளப்பட்ட சிபார்சு தொடர்பாக கவனம் செலுத்துதல் வேண்டும். |

| | | |
|---|---|---|
| (ஆ) பிம் சவிய நிதி ஏற்பாட்டின் மூலம் ரூபா 312 மில்லியன் செலவு செய்யப்பட்டு கொள்வனவு செய்யப்பட்ட நில அளவை உபகரணங்களை உள்ளடக்கிய பல்வேறு மூலதனச் சொத்துக்கள் மற்றும் ரூபா 82 மில்லியன் செலவு செய்து நிர்மாணிக்கப்பட்ட கட்டிடங்களை காணிகள் அமைச்சிடமிருந்து பொறுப்பேற்காது பயன்படுத்தப்பட்டு வந்தன. | பிம் சவிய நிதி ஏற்பாட்டின் மூலம் கொள்வனவு செய்யப்பட்ட மூலதனச் சொத்துக்களைப் பொறுப்பேற்பதற்காக எதிர்காலத்தில் நடவடிக்கை எடுப்பேன். | சொத்துக்களின் சட்டரீதியான உரிமையைப் பெற்றுக்கொள்வதற்காக அச் சொத்துக்கள் முறைப்படியாக பொறுப் பேற்க்கப்படுதல் வேண்டும். |

### 3.2 நட்டங்கள் மற்றும் சேதங்கள்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள் | சிபார்சுகள் |
|---|---|---|
| நட்டங்கள் மற்றும் சேதங்கள் கணக்கில் மீளாய்வாண்டின் இறுதியில் பதிவழிக்காது முன் கொண்டு வந்த மீதிகளின் பெறுமதி ரூபா 7,580,614 ஆக இருந்ததுடன் அவற்றுள் காணப்பட்ட ஐந்து ஆண்டுகளுக்கும் முப்பத்து ஒரு ஆண்டுகளுக்கும் இடைப்பட்ட வீச்சுடைய நட்டங்கள் மற்றும் சேதங்களின் பெறுமதி ரூபா 2,753,891 ஆகும். | கொவிட் நிலைமையின் கீழ் தகவல்களைத் தயாரிப்பதற்கு தாமதித்தனால் விரைவாக பதில் வழங்குவதற்கு நடவடிக்கை எடுப்பேன். | நட்டங்கள் மற்றும் சேதங்களை தாமதமின்றி ஏடுகளிலிருந்து பதிவழிக்க வேண்டும். |

**3.3 முகாமைத்துவ பலவீனம்.**

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| | கணக்காய்வு அவதானிப்பு | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | சிபார்சுகள் |
|---|---|---|---|
| (அ) | நில அளவையாளர் திணைக்கள வளவில் பொருத்தப்பட்டுள்ள அனைத்த தீயனைக்கும் இயந்திரங்களினதும் செயற்படும் காலம் 2020 யூலை 25 ஆந் திகதி முடிவடைந்திருந்த போதிலும் அவற்றினைப் புதுப்பிப்பதற்கு 2021 ஏப்ரல் 30 அந் திகதி வரையும் முடியாதிருந்தது. | தீப்பிடிப்பதனை இனங்காணும் முறைமையினைப் பரீட்சித்து அதனை மீண்டும் தயார்படுத்துவதற்குத் தேவையான முயற்சிகள் எடுக்கப்பட்டுள்ளது. 2020 ஆம் ஆண்டின் போது நிலவிய சூழ்நிலையின் காரணமாக செயற்படும் நிலைக்கு மாற்றுதல் மேற்கொள்ள முடியாதிருந்த போதிலும் ஒரு பகுதி தற்பொழுது நல்ல நிலைக்கு கொண்டு வரப்பட்டுள்ளது. மிகுதிப் பகுதியை எதிர்காலத்தில் நல்ல நிலைக்கு கொண்டு வருவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. | தாமதமின்றி தீயனைக்கும் இயந்திரங்களை செயற்படுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். |
| (ஆ) | திணைக்கள நிரந்தரக் கட்டளையின் அத்தியாயம் ix இன் 9.1 ஆம் பிரிவின் பிரகாரம் இலங்கை நில அளவையாளர் திணைக்களத்தின் பெறுமதி மிக்க வளமாக பாதுகாக்கப்பட வேண்டிக் காணப்பட்ட புலனாய்வு ஆவணக் காப்பகத்தில் மற்றும் மத்திய ஆவணக் காப்பகத்தில் காணப்பட்ட கீழே குறிப்பிட்ட குறைபாடுகளைச் சரி செய்வதற்காக முகாமைத்துவத்தினால் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.<br><br>(i) காற்று வீசுறும் மின்சார விசிறி மற்றும் சமநிலைப்படுத்தும் மின்சார விசிறியைப் பொருத்துதல்.<br><br>(ii) மத்தியப்படுத்திய வாயு | ஆவணக் காப்பகத்தில் உள்ள திட்ட வரைபடங்களின் தொடக்க பிரதிகளை மாத்திரம் ஒதுக்கி வைத்து பேணிப்பாதுகாப்பதற்கு மலசல கூட முறைமையைத் திருத்தம் செய்வதற்காக கேள்விகளைக் கோருவதற்கு, புதிய இறாக்கையைத் தயாரிப்பதற்கு என்பனவாக 2021 ஆம் ஆண்டின் போது நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளன. | திணைக்களத்தின் வளங்களைப் பேணிப்பாதுகாப்பதற்காக ஒரு வேலைத் திட்டத்தை தயாரிப்பதற்கும் காணப்படுகின்ற குறைபாடுகளை பூரணப்படுத்துவதற்கும் நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | சீராக்கி முறைமையை ஸ்தாபித்தல்<br><br>(iii) மேலதிக இறாக்களை வழங்குதல<br>.<br>(iv) உடைந்த நிலையில் உள்ள ஸ்கேன் செய்தல் பிரிவின் கூரையை திருத்தம் செய்தல்.<br><br>(v) உடைந்து விழுந்துள்ள சுவர்ப் பகுதியை திருத்தம் செய்தல்<br><br>(vi) மலசல கூட முறைமையின் நீர்க்கசிவினைத் திருத்தம் செய்தல்.<br><br>(vii)படங்களை வைப்பதற்காக இலாச்சு உடனான பட அலுமாரியை வழங்குதல். | | |
| (இ) | கெஸ்பாவ பிராந்திய அலுவலகம், மொனறாகலை பிராந்திய அலுவலகம் தனமல்லவில பிராந்திய அலுவலகம் என்பவற்றிற்கு எல்லைக் கற்களைப் பதிக்கும் போது அரசாங்கத்தின் எல்லைக்கல் கட்டளைச் சட்டத்தின் 4.15 ஆம் பிரிவிற்கு இணங்க நில அளவை அத்தியட்சகரின் மேற்பார்வையின் கீழ் நடவடிக்கை எடுத்தல் 4.16 ஆம்பிரிவுக்கு இணங்க உரிய செலவு விபரங்களை சிரேஸ்ட நில அளவை அத்தியட்சகருக்கு தெரியப்படுத்துதல், 4.19 ஆம் பிரிவிற்கு இணங்க நூறு எல்லைக் கற்களின் அலகுகளாக குவித்து வைத்தல் 4.39(ஆ) பிரிவிற்கு இணங்க எல்லைக் கற்கள் பேரேட்டினை பேணுதல் 4.43 ஆம் பிரிவுக்கு இணங்க | எதிர்காலத்தில் பதில் வழங்குவதற்கு நடவடிக்கை எடுப்பேன். | எல்லைக் கல் கட்டளைச் சட்டத்தில் காட்டப்பட்டுள்ள ஒழுங்கு விதிகளின் பிரகாரம் நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | எல்லைக் கற்கள் உடைந்து போவதனைக் குறைத்தல், 4.44 மற்றும் 4.45 ஆம் பிரிவுகளுக்கு இணங்க நட்டங்களை அறவீடு செய்வதற்கு நடவடிக்கை எடுத்தல் ஆகிய செயற்பாடுகள் நிறைவேற்றப்பட்டிருக்கவில்லை. | | |
| (ஈ) | 2020 திசெம்பர் 31 இல் உள்ளவாறு பூர்த்தி செய்வதற்கு முடியாதிருந்த நில அளவைக் கட்டளையின் எண்ணிக்கை 29,105 ஆக இருந்ததுடன் அவற்றினுள் 2015 இற்கு முன்பிலிருந்து 2019 ஆம் ஆண்டு இறுதி வரை பூர்த்தி செய்வதற்கு முடியாதிருந்த 27,932 நில அளவைக் கட்டளைகளும் காணப்பட்டன. | வருடாந்தம் அதிக அளவு எண்ணிக்கையான நில அளவைக் கட்டளைகள் கிடைப்பதனால் விசேட நில அளவை வேண்டுதல்களுக்கும் நீதிமன்ற கட்டளைகளுக்கும் முன்னுரிமை வழங்கி நடவடிக்கை எடுக்கப்படுகின்றன. வேலை அளவுகளைத் திருத்தம் செய்ததன் காரணமாக வெளியீடுகள் அதிகரித்துள்ளதன் காரணமாக சில மிகையான அளவுகளை பூர்த்தி செய்ய எதிர்பார்க்கப்படுகின்றது. | நீதிமன்ற நில அளவைக் கட்டளைகளை உள்ளடக்கி நிலுவையாகக் காணப்படுகின்ற நில அளவைக் கட்டளைகளைப் பூர்த்தி செய்வதற்காக திணைக்களத்தினால் வேலைத் திட்டம் அமுல்ப்படுத்தப்படுதல் வேண்டும். |
| (உ) | மீளாய்வாண்டின் இறுதி வரை அரசாங்க உத்தியோகத்தர்களுக்கான முற்பணங்கள் பீ கணக்கில் நிலுவையாகக் காணப்பட்ட கடன் மீதிகளின் மொத்தம் ரூபா 10,635,305 ஆக இருந்ததடன் அவற்றினுள் ரூபா 3,710,891 மொத்த தொகையான 05 ஆண்டுகளை மிகைத்த மீதிகள் அவதானிக்கப்பட்டன. | 05 ஆண்டுகளை மிகைத்த கடன் மீதிகளில் ஒரு பகுதியை பதிவழிப்பதற்கு அங்கீகாரம் கிடைத்திருந்தது. 2021 ஆம் ஆண்டின் போது அதற்காக வேண்டப்பட்டுள்ள நிதி ஏற்பாடு கிடைத்ததன் பின்னர் பதிவழிப்பதற்கு நடவடிக்கை எடுப்பேன் மிகுதிக் கடன் மீதிகளை அறவீடு செய்வதற்கு அல்லது பதிவழிக்கும் செயல் முன்னேற்றத்தை மாதாந்தம் சமர்ப்பிக்குமாறு அனைத்து கணக்காளர்களுக்கும் தெரியப்படுத்தப்பட்டுள்ளன. அந்த செயல் முன்னேறத்தைப் பரீட்சித்தன் பின்னர் மேலும் அறவீடு செய்ய முடியாதுள்ள கடன் மீதிகளைப் பதிவழிப்பதற்கு நடவடிக்கை எடுப்பேன். | காலரீதியாக கடன் மீதிகளை அறவீடு செய்வதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும் |

**4. மனித வளங்கள் முகாமைத்துவம்.**

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| கணக்காய்வு அவதானிப்பு | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | சிபார்சுகள் |
| --- | --- | --- |
| நில அளவையாளர் திணைக்களத்தின் அங்கீகரித்த பதவியணியுடன் ஒப்பிடுகையில் சிரேஸ்ட மட்டத்திலுள்ள பதவியணியினர்களின் வெற்றிடம் 17 சதவீதம், மூன்றாம் மட்ட பதவியணியினர்களின் வெற்றிடம் 58 சதவீதம் நாடளாவிய மட்டத்திலுள்ள பதவியணியினர்களின் வெற்றிடம் 18 சதவீதம், ஆரம்ப மட்டத்திலுள்ள பதவியணியினர்களின் வெற்றிடம் 23 சதவீதம் என்பனவாக ஒட்டு மொத்தமாக பதவியணியினர் வெற்றிடங்கள் 116 காணப்பட்டன. அங்கீகரித்த பதவியணியினர் 22 சதவீதமான இந்தவெற்றிடங்களை நிரப்புவதற்கு முடியாமையின் காரணமாக முகாமைத்துவ தீர்மானங்கணை எடுக்கும் போதும் அதே போல குறிக்கோளிடப்பட்ட பிரதான செயற்பாடுகளை நிறைவேற்றும் போதும் அவை தடையாக தாக்கமளிக்கின்றமை கணக்காய்வின் போது அவதானிக்கப்பட்டது. | 128 பயிற்சி நில அளவையாளர் பதவிகளில் 115 பதவிகளைச் சேர்த்துக் கொள்வற்கு முகாமைத்துவச் சேவைகள் திணைக்களத்திடமிருந்து பெற்றுக்கொள்ளப்பட்ட அங்கீகாரத்தின் பிரகாரம் 2021 பெப்ரவரி 28 ஆந் திகதி நடாத்தப்பட்ட நேர்முகப் பரீட்சையின் பெறு பேறுகளைப் பெற்றுக்கொள்வதற்கு நிர்ணயிக்கப்பட்டிருந்ததுடன் ஏனைய 13 பதவிகளுக்காக தகமைகளைப் பெற்றுள்ள உத்தியோகத்தரிடமிருந்து விண்ணப்பங்களைக் கோருவதற்கு நிர்ணயிக்கப்பட்டுள்ளது. 2016 செப்தெம்பர் 08 ஆந் திகதியிலிருந்து 2019 பெப்ரவரி 15 ஆந் திகதி வரை ஏற்பட்டுள்ள தொழில் நுட்ப மற்றும் நிருவாக உத்தியோகத்தர் வெற்றிடங்கள் 10 இல் 06 வெற்றிடங்கள் சேர்த்துக்கொள்ளபட்டதுடன் மட்டுப்படுத்தப்பட்ட அடிப்படையில் 4 உத்தியோகத்தர்களைச் சேர்த்துக் கொள்வதற்கான விண்ணப்பங்களைக் கோரும் அறிவித்தல் கையொப்பத்திற்காக அமைச்சிற்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளது. சிரேஷ்ட திட்டவரைபடத் தொழில் நுடப் உத்தியோகத்தர் வெற்றிடத்திற்காக நேர்முகப் பரீட்சையை நடாத்தி சிபார்சு செய்து அரசாங்க சேவைகள் ஆணைக்குழுவிற்கு அனுப்பி | தேவைப்பாட்டினை கவனத்திற்கு எடுத்து காணப்படுகின்ற பதவி வெற்றிடங்களை விரைவாக நிரப்புவதற்கு அல்லது அங்கீகரித்த பதவியணியினைத் திருத்தம் செய்வதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

வைக்கப்பட்டுள்ளது. சிரேஸ்ட திட்ட வரைபட தொழில்நுட்ப உத்தியோகத்தர் பதவிகள் 14 இற்காக திறமை அடிப்படையின் கீழ் நேர்முகப் பரீட்சையை நடாத்தி அவற்றில் 10 இற்கு 2017 திசெம்பர் 31 ஆந் திகதியும் 04 பதவிகளுக்கு 2018 திசெம்பர் 31 ஆந் திகதியும் பதவியுயர்வினை வழங்குவதற்கு அரசாங்க சேவைகள் ஆணைக்குழுவிற்கு சிபார்சுகள் அனுப்பி வைக்கப்பட்டுள்ளது. 2017 இல் 06 வெற்றிடங்களுக்கு மட்டுப்படுத்தப்பட்ட அடிப்படையில் நேர்முகப் பரீட்சையினை நடாத்தி 2019 மார்ச் 24 ஆந் திகதியிலிருந்து பதவியுயர்வினை வழங்குவதற்கு அரசாங்க சேவைகள் ஆணைக்குழுவிற்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளன. நில அளவை வெளிக்கள உதவியாளர் பதவிகள் 150 இற்காக பரீட்சையினை நடாத்துவதற்கு மே 23 ஆந் திகதி தீர்மானிக்கப்பட்டிருந்தும் கொவிட் நிலைமையின் காரணமாக பிற்போட வேண்டி ஏற்பட்டுள்ளது.